**கவனிக்க.**-2020.08.07 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II பிரசுரிக்கப்படவில்லை.


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2189 - 2020 අගෝස්තු මස 14 වැනි සිකුරාදා - 2020.08.14

*2189 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 14 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி II - சட்ட சம்பந்தமானது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| சட்டங்கள் | - | பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |
| சட்டமூலங்கள் | - | பிசுக்கால் விற்பனை பற்றிய அறிவித்தல்கள் | 58 |
| மேன்முறையீட்டு நீதிமன்றச் சட்ட அறிவித்தல்கள் | - | மரணசாதன வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற அறிவித்தல்கள் | - | சட்டக் கல்விச் சபையின் அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற குற்றவிசாரணை பற்றிய அறிவித்தல்கள் | - | நொத்தாரிசுமார் பெயர்ப்பட்டியல் | - |
| மாவட்ட நீதிமன்ற, நீதிவான் நீதிமன்ற அறிவித்தல்கள் | - | நானாவித அறிவித்தல்கள் | - |
| கடனிறுக்க முடியாமைக்கான வழக்குகளின் அறிவித்தல்கள் | - | பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2020, செத்தெம்பர் மாதம் 04 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2020, ஓகத்து மாதம் 21ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2020 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*


57- B 082048- 353 (2020/08)

# பிசுக்கால் விற்பனை பற்றிய அறிவித்தல்கள்

## பிசுக்கால் ஏல விற்பனை
## களுத்துறை மாவட்ட நீதிமன்றம்

களுத்துறை மாவட்ட நீதிமன்றம்
வழக்கு இல. :1006/M.B
தன்மை: அடகு
பெறுமதி: 2,500,000.00 ரூபா
களுத்துறை மாவட்ட நீதிமன்றம்
எஸ்கிசி: இல.49/2016

ஹற்றன் நெஷனல் வங்கி பீ.எல்.சீ. (முன்னர் வரையறுக்கப்பட்ட ஹற்றன் நெஷனல் வங்கி)
பதிவு அலுவலகம்: இல. 479, (முன்பு 481), டீ.பி. ஜாயா மாவத்தை, கொழும்பு 10.

வழக்காளி

எதிர்

1. தெல்பே ஆசாரிகே சாமிக பிரசாத், இல. 447, காலி வீதி, நல்லூருவ, பாணந்துறை

மற்றும் நிமல் என்டிக்ஸ், இல. 3/14, சுவர்ண பிரதேசம், நாவல.

புதிய முகவரி: சீ. எஸ். டெக்னொலொ ஜீஸ், இல.337, காலி வீதி, கொழும்பு 3.

2. தெல்பே ஆசாரிகே நிமல்சிறி, இல.195, காலி வீதி, பயாகல வடக்கு, பயாகல.

எதிராளிகள்

மேற்படி இலக்கம் கொண்ட வழக்கில் இந்த நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட தீர்ப்புப் படி மேற்படி எதிராளியினால் இங்கு கீழ் காணும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள ஆதனங்கள் தொடர்பான 1,903, 606.18 ரூபா தொகையை (செலுத்திய தொகையை கழித்த பின்னர்) வழக்காளி வங்கிக்கு செலுத்துவதை தவறியுள்ளபடியால் குறித்த தொகையையும், 2008.08.27 ஆந் திகதி தொடக்கம் முழுத் தொகையை செலுத்தி முடிக்கும் வரை 22% வருடாந்த வட்டியும் பெறுவதற்காக இந்நீதிமன்றத்தால் எனக்குக் கிடைக்கப்பட்டுள்ள 2016.10.18 ஆந் திகதிய அதிகாரப்படி என்னால் 2016.10.18 ஆந் திகதி தடை செய்யப்பட்டுள்ள எதிராளிக்கு சொந்தமான கீழ்க்காணும் அட்டவணையில் விபரிக்கப்பட்ட அசையாத ஆதனம்.

**2020, செத்தெம்பர் மாதம் 24 ஆந் திகதி பி.ப. 2.30 மணிக்கு மேற்படி பெயரிடப்பட்ட எதிராளியின் ஆதனம் அமைந்துள்ள இடத்தில் என்னால் பிசுக்கால் ஏல விற்பனையில் விற்பனை செய்யப்படும்.**

**கட்டணம் செலுத்தும் விதம்**: ஏலம் முடிவடைந்தவுடன் உத்தேசக் கொள்வனவாளர் விற்பனை விலையின் 25% தொகையும், நீதிமன்றத்தால் அனுமதிக்கப்பட்டுள்ள கட்டணங் களின் படி அரசாங்கக் கட்டணங்களும் , விற்பனைத் தொகையி லிருந்து 25% ஏலதாரின் தரகுப் பணமும், உள்ளூராட்சி சபைக் கட்டணங்கள், ஏலத்திற்காக செலவு செய்யப்பட்ட முழுச் செலவுகளும் ஏலதாா்களுக்குச் செலுத்த வேண்டும். மேலும் கொள்வனவாளரால் மிகுதி 75% த்தை ஏலத்திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் அவ்வழக்குக்கு பற்றாகக் குறித்த களுத்துறை நீதிமன்றத்தில் வைப்பீடு செய்யப்பட வேண்டியதுடன், அதற்காக ஏற்றுக்கொள்ளப்படக் கூடிய இரு பிணையாட்களை அதே தருணத்தில் முன்வைத்து விற்பனை நிபந்தனைகளுக்கு கையொப்பமிட வேண்டும்.

**காணிக்குச் செல்லும் விதம்**: கொழும்பிலிருந்து காலி வீதியில் கட்டுருந்த சந்தியில் 2 கிலோ மீற்றர் சென்றவுடன், இல. 212 என்ற ஆதனம் காலி வீதியில் பயாகல மேற்கு எல்லையில் அமைந்துள்ளது.

### அட்டவணை

மேல் மாகாணத்தில், களுத்துறை மாவட்டத்தின் , தொடமுன தெற்கு பயாகல பெத்தேவில் மஹா பயாகலவில் அமைந்துள்ள க்ரெகரி கொடேஜ் அல்லது லியன்னா வத்த, கரந்தகஹ வத்த மற்றும் குடா ஹெரயா வத்த என்ற காணிக்கு அனுமதிபெற்ற நிலஅளவையாளர் என். டி. எஸ். வீரக்கொடி அவர்களால் 1998.05.07 ஆந் திகதி அளந்து தயாரிக்கப்பட்டு 3901 என்ற வரைபடத்தின்படி காணிக்கு எல்லைகள்- வடக்கு: இக்காணியின் ஒரு பகுதி; கிழக்கு: கெவிடியாகல லியனகேயின் வாரிசுகளின் காணி; தெற்கு: இக்காணியின் ஒரு பகுதி மற்றும் மேற்கு: கொழும்பு - காலி பிரதான வீதி என்ற காணி 26 பேர்ச் அளவு னொண்டுள்ளதுடன் ,குறித்த காணி மற்றும் அதனுள் அமைந்துள்ள சகலதும்.

மேற்படி காணி பின்வரும் காணியிலிருந்து பிரிக் கப்பட்டுள்ளது.

மேல் மாகாணத்தின் களுத்துறை மாவட்டத்தின் தொடமுன தெற்கு பயாகல பெத்தேவில் மஹா பயாகலவில் அமைந்துள்ள க்ரெகரி கொடேஜ் அல்லது லியன்னா வத்த, கரந்தகஹ வத்த மற்றும் குடா ஹெரயா வத்த என்ற காணிக்கு அனுமதி பெற்ற நிலஅளவையாளர் எல்.ஏ.எச். ராஜகாரியர் அவர்களால் 1959.08.25 ஆந் திகதி அளந்து தயாரிக்கப்பட்ட 86 என்ற வரைபடத்தின் படி காணிக்கு எல்லைகள்- வடக்கு: வரைபட இல. 860 இல் காட்டப்பட்டுள்ள துண்டு 04 ; கிழக்கு: கெவிடியாகல லியனகேயின் வாரிசுகளின் காணி; தெற்கு: துண்டு 2 மற்றும் மேற்கு: குறித்த வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள கொழும்பு - காலி பிரதான வீதி என்ற காணி 26.8 பேர்ச் அளவு கொண்டுள்ளதுடன், குறித்த காணி மற்றும் அதனுள் அமைந்துள்ள சகலதும். இக்காணி களுத்துறைக் காணிப்பதிவகத்தில் H 261/140 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பதிவாளர்/உதவி பிசுக்கால்.
மாவட்ட நீதிமன்றம்,
களுத்துறை.

2020, யூலை 28.

8- 213